குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.29/2023

ம.சா. 2

2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 17–ம் தேதி திங்கள் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திக்ராஜா | தொழில் | |
| தந்தை பெயர் | செந்தில்குமார் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 03.32 மணி,

Complainant Ambika present. Accused Devi absent. Petition u/s 317 Cr.P.C filed and allowed. Advocate Mr.G.Prabhu present for accused.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1) நான் கனரா வங்கியில் பாப்பம்பாடி கிளையில் 10.06.2024 தேதி முதல் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். மேற்படி கிளையில் 2024 ஜுன் மாதத்திற்கு முன்பு நடந்தது எனக்கு நேரடியாக தெரியாது. ம.சா.ஆ.1 ஆவணம் எங்களது கிளையில் பராமரித்து வருகிற வங்கி கணக்கின் காசோலை என்று எனது முதல் விசாரணையில் எந்த அடிப்படையில் கூறினேன் என்றால் IFSC code வைத்து சொல்ல இயலும். ம.சா.ஆ–1 ஆவணத்தில் எதிரி தேவி என்பவர் பெயர் இல்லை என்றால் சரி. 2015–2016 ம் ஆண்டு முதல் காசோலையில் பெயர் அச்சடித்து காசோலை புத்தகம் கொடுக்கப்பட்டு வருகிறது. 2015 ம் ஆண்டுக்கு முன்பு காசோலை புத்தகம் பெயர் இல்லாமல் கொடுக்கப்படும். காசோலை புத்தகம் வாடிக்கையாளர் கேட்டவுடன் கொடுக்கப்படுமா என்றால் சரி. காசோலையில் அது வங்கியில் இருந்து வாடிக்கையாளருக்கு கொடுக்கப்பட்ட வருடம் குறிப்பிட்டு இருக்குமா என்றால் இல்லை. காசோலையில் வங்கி கணக்கு எண்ணிற்கு கீழ் குறிப்பிட்டுள்ள 2010 என்ற வருடம் காசோலை அச்சடிக்கப்பட்ட வருடத்தை குறிக்கிறது.

2) காசோலை விபரங்களில் ஒரு எழுத்தின் மேல் இன்னொரு எழுத்தை எழுதினால் அந்த காசோலை செல்லாது. காசோலையில் அடித்தல் திருத்தல் இருந்தால் செல்லாது, ஆனால் காசோலை வரைபவர் அதன் அருகில் கையொப்பம் செய்தால் அந்த காசோலை செல்லும். அவ்வாறு கையொப்பம் செய்யாமல் அடித்தல் திருத்தல் இருந்தால் அந்த காசோலை செல்லாது. காசோலையில் கையொப்பம் அடிக்கப்பட்டு இருந்தால் செல்லாது, ஆனால் காசோலையை வசூலுக்கு செலுத்தும் போது வங்கியில் கையொப்பத்தை உறுதிபடுத்திய பின் அடிக்கும் வழக்கம் உள்ளது. காசோலையின் கையொப்பத்தை எதிரி அடித்திருக்க வாய்ப்புள்ளதா என்றால் இருக்கலாம்.

3) காசோலை கையொப்பத்தை ஏற்கனவே அடித்து அதன் பின் காசோலையை வசூலுக்கு செலுத்தப்பட்டதகாவும், எங்களது வங்கியில் சரிவர உறுதிப்படுத்தாமல் போதுமான பணம் இல்லை என்று சொல்லி காசோலை திருப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காசோலையை சரிவர பார்த்து இருந்தால் கையொப்பம் அடிக்கப்பட்டதை கவனித்து திருப்பப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. எனவே செல்லாத காசோலையை வசூலுக்கு எடுத்துக் கொண்டது தவறு என்றாலும் அதற்காக ரிட்டன் மெமோ கொடுத்தது தவறு என்றாலும் சரியல்ல. புகார்தாரர் பாப்பம்பாடி கிராமத்தின் மகளிர் சுய உதவிக்குழுவின் தலைவி என்பதாலும் எங்களது

வங்கியில் நிறைய உறுப்பினர்களை வங்கி கணக்கு தொடங்கி கொடுப்பதாலும் அவருக்கு ஆதரவாக செல்லாத காசோலையை எங்களது வங்கியில் வசூலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 03.58 மணி.

Sd/.S.Sadhamhusain,
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.